**அனுப்புநர்,**

திருமதி. இர. திருவளர்செல்வி,
முதன்மைக் கல்வி அலுவலர்,
செங்கல்பட்டு மாவட்டம்.

**பெறுநர்,**

செயலாளர்,
டான் பாஸ்கோ பாலிடெக்னிக் கல்லூரி,
திருக்கழுக்குன்றம்.

ந,க,எண். 198 /D7-SS-CPT-2026 நாள்: 05.08.2026

**பொருள் :** செங்கல்பட்டு மாவட்டம் – பள்ளிக்கல்வித் துறை – உயர் கல்வி வழிகாட்டல் – +2 மாணவர்கள் தொழில் நுட்ப கல்லூரி (பாலிடெக்னிக் கல்லூரி) விழிப்புணர்வு – Don Bosco Politechnic College – Technical Expo – பங்கேற்பு பள்ளிகளுக்கு அனுமதி வழங்குதல் சார்பு.

**பார்வை** செயலாளர், Don Bosco Politechnic College, திருக்கழுக்குன்றம், செங்கல்பட்டு மாவட்டம், அவர்களின் வேண்டுதல் கடிதம் நாள்: 27.07.2026.

******

செங்கல்பட்டு மாவட்டம், பள்ளிக்கல்வித் துறை பார்வையில் காணும் கடிதத்தின் வாயிலாக, செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் டான் போஸ்கோ பாலிடெக்னிக் கல்லூரியில், வரும் **ஆகஸ்ட் இரண்டாவது வாரத்தில்** பள்ளி மாணவர்களுக்கான ஒரு துறைவாரியான தொழில்நுட்பக் கண்காட்சி (Department-wise Technical Expo) நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும், இக்கண்காட்சியைச் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள அரசு, அரசு நிதி உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளின் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பார்வையிட அனுமதி வழங்குமாறும் கோரப்பட்டிருந்தது.

அக்கடிதத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையின் அடிப்படையில், பள்ளி மாணவர்களின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமைப் படைப்பாற்றல் (STEM) திறன்களை ஊக்குவிக்கும் நோக்கில், இக்கண்காட்சியை மாணவர்கள் பார்வையிட **அனுமதி வழங்கப்படுகிறது**. மேலும், இந்த அனுமதியானது கீழே குறிப்பிட்டுள்ள **நிபந்தனைகளுக்கு** உட்பட்டு வழங்கப்படுகிறது:

1. **பாதுகாப்பு ஏற்பாடுகள்:** கண்காட்சிக்கு வரும் மாணவர்களின் பாதுகாப்பிற்கு கல்லூரி நிர்வாகமும், சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்களும் முழுப் பொறுப்பேற்க வேண்டும்.
2. **இலவசப் போக்குவரத்து:** கல்லூரி நிர்வாகம் குறிப்பிட்டபடி, மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை (அழைத்து வருதல் மற்றும் திருப்பி அனுப்புதல்) எவ்விதக் கட்டணமுமின்றி பாதுகாப்பான முறையில் கல்லூரித் தரப்பில் செய்து தரப்பட வேண்டும்.

3. **கல்விப் பணி பாதிப்பின்மை:** பள்ளிகளின் வழக்கமான தினசரி கல்விப் பணிகளுக்கும், பாடத்திட்டங்களுக்கும் எவ்வித இடையூறும் ஏற்படாத வண்ணம் மாணவர்களின் வருகை அட்டவணை (Schedule) திட்டமிடப்பட வேண்டும்.
4. **கட்டண விலக்கு:** கண்காட்சியைப் பார்வையிடவோ அல்லது அங்கு நடத்தப்படும் போட்டிகளில் பங்கேற்கவோ மாணவர்களிடம் இருந்து எவ்விதக் கட்டணமும் (Entry Fee) வசூலிக்கக் கூடாது.

எனவே, கல்லூரி நிர்வாகம் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள இணைப்பில் உள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்களைத் தொடர்பு கொண்டு, மாணவர்களின் வருகையை உரிய பாதுகாப்பு நெறிமுறைகளுடன் ஒருங்கிணைத்து நல்வழியில் நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**முதன்மைக்கல்வி அலுவலர்,**
செங்கல்பட்டு மாவட்டம்.

**நகல்:**

1. சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள்,(இணைப்பில் உள்ளவாறு).
2. மாவட்ட கல்வி அலுவலர், செங்கல்பட்டு.

| S.no | School Name |
| --- | --- |
| 1 | Veerapuram Govt High School |
| 2 | Govt High School, Kulipanthadalam |
| 3 | Pandur Govt Higher Secondary School |
| 4 | Adidravidar Govt Higher Secondary School, Nerumpur |
| 5 | Vayalur Govt Higher Secondary School |
| 6 | Vengapakkam Govt Higher Secondary School |
| 7 | Govt Higher Secondary School, Poonjeri |
| 8 | Government High School, Salur |
| 9 | Government High School, vallipuram |
| 10 | Government High School, bothur |
| 11 | Government higher secondary school, melavalam |
| 12 | St.joseph Hr sec school, chengalpattu |
| 13 | St. Columba's Higher Secondary School, chengalpattu |
| 14 | Ramakrishna Mission Boys Higher Secondary School, chengalpattu |
| 15 | Ramakrishna Mission Girls Higher Secondary School, chengalpattu |
| 16 | Arignar Anna Government Higher Secondary School, Chengalpattu |
| 17 | Government Girls Higher Secondary School, Chengalpattu |
| 18 | Pugazhendi Pulavar Government Higher Secondary School, PV Kalathur |
| 19 | Government Boys Higher secondary school, thiruporur |
| 20 | Government Higher Secondary School, Manampathy |
| 21 | Government Boys Higher secondary school, Thirukazhukundram |
| 22 | Government Girls Higher secondary school, Thirukazhukundram |
| 23 | Government High School, Oragadam |
| 24 | Government High School, Sogandy |
| 25 | PTVS High School, Thirukazhukundram |